17th February 1959]

Subsidy to Harijans

*395 *Q.*—Sri K. B. S. MANI (on behalf Sri M. C. Muthukumaraswamy) : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

ஹரிஜனங்களுக்குக் காளை மாட்டுக்காக மான்யத் தொகை கொடுக்கும் போது ரெவின்யூ டிபார்ட்மெண்டார் அத்தாட்சி பத்திரம் (Certificate) அளிப்பதற்குப் பதிலாக சம்பந்தப்பட்ட தொகுதி சட்டசபை உறுப்பினர்கள் அத்தாட்சி பத்திரத்தை அளிக்கலாமென உத்தரவு போட உத்தேசம் உண்டா ?

The Hon. Sri P. KAKKAN : Sir, there are already instructions to the effect that a certificate from an M.L.A. or M.P. may be produced by the applicant in support of his community when he claims subsidy for plough-bulls, etc.

Sri P. G. MANICKAM : ஸார், ஹரிஜனங்களுக்கு மாடுகள் வாங்கிக் கொடுக்கப்படும் இந்த மானியத் தொகை தொடர்ந்தாற்போல் கொடுக்கப்படவேண்டுமென்பது அரசாங்கத்தார் நோக்கமா ? அரசாங்கத்தின் நோக்கம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri P. KAKKAN : அதை நான் பின்னால் பார்த்துத்தான் சொல்ல வேண்டும்.

Sri A. GOVINDASAMY : ஸார், ஹரிஜனங்களுக்கு விவசாயத்திற்காக மாடு வாங்க அரசாங்கம் பணம் உதவுகிற நேரத்தில் குறைந்த அளவு தரப்படுகிறது. அதை மேலும் அதிகப்படுத்திக் கொடுக்க அரசாங்கம் அதிக நிதி ஒதுக்குவார்களா ?

The Hon. Sri P. KAKKAN : நிதி இருப்பதற்குத் தக்கபடிதான் ஒதுக்கி மாடு வாங்குவதற்குக் கொடுக்கப்படுகிறது.

Sri K. B. S. MANI : ஸார், இந்த அரசாங்கம் தற்போது கொடுத்துவருகிற உதவி மேன்மேலும் நன்மை கொடுக்க வேண்டுமானால், இதைச் சற்று முன்கூட்டியே கொடுக்க வகை செய்தால் மிகவும் நன்மையாக இருக்கும். அம்மாதிரி வருகிற ஆண்டில் கொடுப்பதற்கு அரசாங்கம் ஆவன செய்வார்களா ?

The Hon. Sri P. KAKKAN : எப்போது எவ்வளவு துரிதமாகக் கொடுக்க முடியுமோ அவ்வளவு துரிதமாகக் கொடுத்துக்கொண்டுவருகிறோம்.

Nari Kuravars

*400 *Q.*—Sri T. SAMPATH (on behalf of Sri V. Sankaran) : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether the Government propose to recognize "Nari Kuravars" as Adivasis or Scheduled Tribes and afford them all benefits and facilities granted to the latter?

The Hon. Sri P. KAKKAN : Yes, Sir.

Sri A. A. RASHEED : Has any action been taken to settle these "Nari Kuravars" in any particular area?

The Hon. Sri P. KAKKAN : We have done it.

Sri M. K. SOMASUNDARAM : ஸார், நரிக்குறவர்கள் ஹரிஜனங்களை விடக் கீழ்த்தரமான நிலைமையில் இருப்பதால் அவர்களை ஹரிஜனங்கள் லிஸ்டில் சேர்த்து அவர்கள் முன்னேற்றத்திற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ?